## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.18/2019

**வாதி சாட்சி 1 - கிருஉ்ஷ்ணன் த/பெ.ராமசாமி**

12.02.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திரு.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 கிருஉ்ஷ்ணன் அழைக்கப்பட்டு 1,2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

2ம் பிரதிவாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அதன் விவரம் என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. என் தந்தை 3 முறை பஞ்சாயத்து தலைவராக இருந்தாரா என்றால் 2 முறை பஞ்சாயத்து தலைவராக இருந்தார். பொதுகுடும்பமாக இருந்த போது நான் என் தந்தை உயிரோடு இருந்த போது அவருடன் கூட்டாக ஒத்துழைத்தேனா என்றால் ஒத்துழைத்தேன். பொதுகுடும்பத்தில் இருந்த போது என் தந்தை எதற்காக கடன் வாங்கினார் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் நானும் என் தந்தையும் சேர்ந்து டிராக்டர் வாங்குவதற்காக வங்கியில் கடன் வாங்கினோம். பொதுகுடும்பத்தில் வருமானம் எவ்வளவு வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் தந்தை வெளியில் எவ்வளவு தொகை கடன் வாங்கினார் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் தந்தைக்கும் எங்களுக்கும் சொந்தமாக ரைஸ்மில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ரைஸ்மில்லை நிர்வாகம் செய்தது நானும் என் தகப்பனாருமா என்றால் ஆமாம். அந்த ரைஸ்மில்லை அபிவிருத்தி

செய்வதற்காக என் தந்தை கடன் வாங்கினாரா என்றால் இல்லை, டிராக்டர் வாங்குவதற்கு தான் கடன் வாங்கினார். என் தந்தைக்கு சொந்தமாக 4 கல் வீடுகள் உள்ளதா என்றால் 3 கல் வீடுகள் மற்றும் 1 மெத்தை வீடு உள்ளது. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே ஒரு வீட்டை நான் ஜேசிபி வைத்து இடித்துவிட்டேன் என்றால் நான் இடிக்கவில்லை. நான் வீட்டை இடித்ததாக என்

தாயார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுக்கவில்லை. என் தயார் புகார் கொடுத்து என் மீது வழக்கு பதிவு செய்து நிலுவையில் உள்ளது என்றால் அப்படி இல்லை. 5ம் பிரதிவாதி தணிகையரசு யார் என்றால் அவரிடம் நானும் என் தந்தையும் கேஸ் கம்பெனி நடத்துவதற்காக அடமான கடன் வாங்கினோம். 6ம் பிரதிவாதி செந்தில்குமார் என் பெரியம்மா மகன் என்றால் சரிதான். எனக்கும் என் சகோதரர் மற்றும் தயாருக்கும் இடையில் இந்த வழக்கிற்கு முன்பு விரோதம் ஏதும் இல்லை என்றால் சரிதான். கூர்சீட்டு அடிப்படையில் ஏற்கனவே என் சகோதரரான 2ம் பிரதிவாதி அவருக்கு விடப்பட்ட கடன்களை அடைத்துவிட்டார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியின் கேஸ் கம்பெனியில் 2ம் பிரதிவாதி working partner ஆக இருந்தார் என்று நான் கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு முன்பு இருந்தே 4ம் பிரதிவாதியின் கணவர் தான் கேஸ் கம்பெனி வைத்து நடத்திவந்தார் என்றும் அதில் 2ம் பிரதிவாதி working partner ஆக இருந்ததில்லை என்றும் சொன்னால் கேஸ் கம்பெனியில் இரண்டு பங்குகள்

இருந்தது, ஒரு பங்கு 4ம் பிரதிவாதியின் கணவருடையது, மற்றொரு பங்கினை என் தந்தை வாங்கினார். நான் சொல்வது தவறு என்றும் 4ம் பிரதிவாதியின் கணவருடையது தான் அந்த கேஸ் கம்பெனி என்றும் அதில் என் தந்தையோ அல்லது 2ம் பிரதிவாதியோ பங்குதாரராக இருந்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் நான் பயிர் செய்கிறேனா என்றால் முழு நிலமும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் அனுபவிக்கிறார்கள். வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்தே தாவா சொத்துக்கள் பயிர் செய்யப்படாமல் கரம்பாக உள்ளது என்றும் அதில் 1,2 பிரதிவாதிகளோ அல்லது மற்ற நபர்களோ விவசாயம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

(வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.